பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 27 | புதன்கிழமை | 10.07.2024 | அதிர்வு 344

## நேற்றும் ஒருவர் சுட்டுக்கொலை!



மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் 06▶



### நாடாளுமன்றக் குழுத் தலைவராக செல்வம் தெரிவானாலும்

# தமிழ்க் கூட்டமைப்பு எனச் செயற்பட இனி இடமில்லை என்கின்றார் சித்தர்

(நடராசா லோகதயாளன்)

நாடாளுமன்றக் குழுத் தலைவராக செல்வம் அடைக்கலநாதன் தேர்வு செய்யப்பட்டாலும் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் பொதுவெளியில் செயற்பட சாத்தியமே இல்லை என்று புளொட் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

அவர் வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார். 06▶

# கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று பிற்பகல் கூடுவர்

## செல்வத்துக்கு சித்தரும் ஆதரவு



(ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பதவியை செல்வம் அடைக்கலநாதன் எம்.பிக்கு வழங்குமாறு புளொட் கட்சியின் த.சித்தார்த்தன் எம்.பியும் பரிந்துரைத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் மறைவால் நாடாளுமன்றில் ஏற்பட்ட நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுற்கு 06▶



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கு உரித்து கோருகின்றார் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.

அவருக்கு அதனை வாரி வழங்கி விடத் துடியாய்த் துடித்துக் கொண்டு நிற்கின்றார் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜா. தமிழரசு கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் கொறடாவாகச் செயல்படும் சார்ள்ஸ் நிர்மலநாதனைத் தொடர்பு கொண்டு, நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பதவிக்கு செல்வத்தை தெரிவதற்காக குழு கூட்டத்தை உடனே கூட்டும் படி அறிவுறுத்தி இருக்கிறார் மாவை என அறிய வந்தது.

சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை....!

ரெலோத் தலைவர் செல்வத்துக்கு தமிழரசு நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியைக் கொடுத்தாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் உயிர் கொடுக்க 06▶






# நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பு

## முக்கிய சேவைகள் நேற்று பாதிப்பு

நாடளாவிய ரீதியில் நேற்று பணிப்புறக்கணிப்பு மற்றும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதனால், முக்கிய சேவைகள் பல பாதிக்கப்பட்டதுடன், மக்கள் அசௌகரியங்களுக்கு ஆளாகியிருந்தனர்.

ரயில் நிலைய அதிபர்களின் பணி புறக்கணிப்பால் அனைத்துத் தபால் ரயில் சேவைகளும் இரத்தாகின.

இதேவைள, ரயில் நிலைய அதிபர் சங்கத்தினர் நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதால் இன்று காலை பெருமளவிலான அலுவலக ரயிக் சேவைகள் இரத்தாகும் என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நாடளாவிய ரீதியில் அதிபர்கள், ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டமையால், பாடசாலை கல்வி நடவடிக்கைகள் வெகுவாக பாதிக்கப்பட்டன.

சில பாடசாலைகளில் நேற்று அதிபர்கள், ஆசிரியர்கள் வருகை தந்த நிலையில், மாணவர்களின் வரவுகள் குறைவான நிலையிலேயே காணப்பட்டன.

பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்களின் வரவின்மை காரணமாக பாடசாலைக்கு வருகைதந்த மாணவர்கள் திரும்பிச்சென்றனர்.

பாடசாலைகளுக்குச் பிறரின் சைக்கிள்களிலும் பாடசாலை வாகனங்களிலும் வருகைதந்த மாணவர்கள் ஆசிரியர்கள் வருகைதராத காரணத்தினால் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கினர்.

தமக்கான நிலுவை சம்பளத்தினை வழங்க கோரி இலங்கை ஆசிரியர் சங்கம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் நேற்றைய தினம் சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, நுவரெலியா மாவட்ட செயலக ஊழியர்கள் மற்றும் நுவரெலியா மாநகர சபை ஊழியர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இங்கு தொழில் புரியும் அதிகாரிகளில் 13 வீதமானவர்களே கடமைக்கு சமுகமளித்தனர் என நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தனர்.

எனினும் பெரும்பாலான அலுவலகங்கள் வெறுமையாகக் காணப்பட்டதுடன், நுவரெலியா மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் ஒரு சிலர் மாத்திரமே வருகை தந்துள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் கல்முனை தலைமை அலுவலகத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்றினை மின்சார சபை ஊழியர்கள் நேற்று முன்னெடுத்தனர்.

இப்போராட்டத்தின் போது 2024 ஆண்டிற்கான சம்பள உயர்வை உடனடியாக வழங்கு, சம்பள முரண்பாட்டு தீர்வை உடனடியாக வழங்கு, வேலை நீக்கம் செய்த 62 தொழிலாளர்களை உடனடியாக சேவையில் இணைத்துக் கொள் என பல்வேறு வாசகங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து அமைதி வழிப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மேலும், மின்சார தொழிலாளர் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லையாயின் ஆட்சியாளர்களை விரட்டியடிப்போம் என ஊடகங்களிடம் குறிப்பிட்டனர்.

இதன் போது சுமார் 50 இற்கும் அதிகமான உத்தி

தொடர்ச்சி▼



















# நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பு

## முக்கிய சேவைகள் நேற்று பாதிப்பு

தொடர்ச்சி▲

யோகத்தர்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றிருந்தமையுடன் இலங்கை மின்சாரத் தொழிற்சங்கம் இப்போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடையில் பல பகுதிகளில் தோட்ட தொழிலாளர்கள் நேற்று காலைப் பணிக்கு செல்லும் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மே மாதம் வழங்குவதாக கூறிய 1,700 ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்காததால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் 1,700 ரூபா சம்பளம் வழங்க வேண்டும் எனவும் கோரி இந்த ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பலாங்கொடை பெருந்தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான பலாங்கொடை முருங்கவத்த தோட்ட தொழிலாளர்கள் முருங்கவத்த தோட்த்தில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் வேலையில் சுமார் 15 நிமிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், பலாங்கொடை பெருந்தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான பலாங்கொடை சிசில்டன் தோட்டத்தில் தோட்ட தொழிலாளர்கள் நேற்றுக் காலைப் பணிக்குச் செல்லும் வேலையில் சுமார் 15 நிமிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்படாவிட்டால் இனி வரும் தேர்தலில் மலையக மக்களிடம் வாக்குகள் கேட்டு வர வேண்டாம் எனவும் இம்முறை எந்த கட்சிக்கும் வாக்களிக்கப் போவதில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தோட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1,700 ரூபா வழங்குமாறு வலியுறுத்தி வட்டகொடை, தெற்கு மடக்கும்புர தோட்ட தொழிலாளர்கள் அத்தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் தாங்கள் பல்வேறு நெருக்கடியை சந்தித்து வருகின்றனர். 1,700 ரூபா கூட போதாது, எனவே, குறைந்தபட்சமாக கோரப்பட்டுள்ள அந்த தொகையையாவது வழங்குவதற்கு கம்பனிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.











# துருக்கியக் கடற்படையின் போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது

துருக்கிய கடற்படையின் டி.சி.ஜி கினாலியாடா கப்பல் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றிற்காக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

152 மாலுமிகளைக் கொண்ட இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரியாக செர்கன் டோகன் என்பவர் கடமையாற்றுகிறார்.

டோகனுக்கும் மேற்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சமன் பெரேராவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பொன்றும் இங்கு இடம்பெற்றுள்ளது.

மேற்படி கப்பல் நாளை வரை இலங்கையில் நங்கூரமிட்டிருக்கும் என்றும், அதன் மாலுமிகள் இலங்கையின் முக்கிய இடங்களைப் பார்வையிட பல பகுதிகளுக்குச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

















# விடைத்தாள் மதிப்பீட்டுக் கொடுப்பனவை அதிகரிக்கும் யோசனைக்கு அங்கீகாரம்




க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டுக் கொடுப்பனவை அதிகரிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தை உள்ளடக்கிய உப குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இது தொடர்பான பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இதன்மூலம், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்பட உள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# தோட்டப் பகுதிகளினை கிராமங்களாக பெயரிடுவதற்கு அமைச்சரவை தீர்மானம்

பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள தோட்டப் பகுதிகளைக் கிராமங்களாகப் பெயரிடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவிப்பினை வெளியிடுவதற்கு நேற்று கூடிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நாடாளுமன்றில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

தங்களின் ஆலோசனையுடன் ஜனாதிபதி இதற்கான யோசனையை முன்வைத்து, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடியாதா, நாடாளுமன்றுக்கு வெளியில் கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தனின் இடத்தில் தான் செயல்பட முடியாதா, வரக்கூடிய பொது தேர்தலில் கூட்டமைப்பு ஒன்றாக நின்று வேட்பாளராக தன்னையும் சேர்த்து நிறுத்தினாலாவது தான் எம்.பியாக வர முடியாதா என்றெல்லாம் அவருக்கு நப்பாசைகள்.

அதனால்தான் யாழ்ப்பாணத்தில் இருந்து சார்ள்ஸ் நிர்மலநாதனுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து நச்சரித்து, கூட்டத்தை இன்று கூட்டப் பண்ணி இருக்கிறார் அவர்.

இன்றிரவு தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நிகழ்நிலையில் கூடுகின்றது. கட்சி வழக்கு விடயத்தை இறுதி செய்வதற்காக தமிழரசின் மத்திய குழு 14ஆம் திக்கதி ஞாயிற்றுக்கிழமை கூட இருக்கின்றது. இரண்டு கூட்டங்களிலும் இதுகுறித்து ஆராய்ந்த பின்னர்தான் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியை தமிழரசு கட்சி அல்லாத ஒருவருக்கு விட்டுக் கொடுப்பது குறித்து தீர்மானிக்க முடியும் என்று தமிழரசின் எம்.பிக்க சிலர் கருத்து முன் வைக்கக் கூடும்.

அதன் அடிப்படையில் இந்த விடயம் இம்மாதம் மூன்றாம் வாரத்துக்குத் தள்ளி வைக்கப்பட வாய்ப்புகள் உண்டு.

\+ + +

நேற்று எனது பத்தியின் ஆரம்பத்தில் ஒரு தப்பு. நீலன் திருச்செல்வம் எம்.பி. குண்டுவெடிப்பில் உயிரிழந்தமையை அடுத்து ஏற்பட்ட தேசியப் பட்டியல் எம்.பி. பதவி வெற்றிட சர்ச்சை என்று நான் குறிப்பிட்ட விடயம் தவறு. அது எனது நினைவில் - ஞாபகத்தில் - ஏற்பட்ட பிழை. அது அமிர்தலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட தேசிய பட்டியல் வெற்றிடத்தில் ஏற்பட்ட சர்ச்சை. இந்த இரண்டு எம்.பிக்களின் படுகொலைகளையும் அடுத்து அந்தத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை ஏற்றவர் ஒருவரே. அதனால் என் மனப் பதிவில் ஒரு குழப்பம். அதனால் தவறு. மன்னிக்கவும்.

அடுத்தது - கடந்த பொதுத் தேர்தலில் தேசிய பட்டியல் நியமனத்தை விரைந்து கொடுத்து சம்பந்தன் பழி தீர்த்துக் கொண்டார் என நான் குறிப்பிட்டு இருந்தேன்.

அது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளரும் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான துரைராஜசிங்கம் நேற்றுத் தொடர்பு கொண்டார்.

"அந்தத் தீர்மானம் எடுத்ததில் சம்பந்தன் காரணம் அல்லர். அம்பாறை மாவட்டம் பிரதிநிதித்துவம் இல்லாமல் ஒதுக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக கட்சியின் பொதுச் செயலாளர் நானே முன்நின்று அந்த முடிவை எடுத்து, முன்நகர்த்தினேன். அதற்காக சம்பந்தன் மீது குற்றம் சுமத்துவது பொருத்தமற்றது." - என்று சுட்டினார் துரைராஜசிங்கம். அவரது தெளிவுபடுத்தல்கள் வாசகர்களுக்குச் சமர்ப்பணம்.

## நேற்றும் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார்.

இந்தத்துப்பாக்கிப்பிரயோகம்இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டியவில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேயிலைத் தோட்ட உரிமையாளரான 61 வயதுடைய நபரே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் பிரதம குரு நேற்று காலமானார்



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பிரதம குரு கணபதிசாமிக்குருக்கள் சுதர்சனக்குருக்கள் தனது 76 ஆவது வயதில் நேற்று இயற்கை எய்தினார்.

இவர் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் பிரதம குருவாக இறை பணியாற்றியுள்ளார்.

இவர் யாழ். வடமராட்சி, துன்னாலை மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், சிவன் கோயிலடி, ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்டவர் ஆவார்.

அன்னாரின் இழப்பு வல்லிபுர ஆழ்வார் பக்தர்களுக்கும், வடமராட்சி மக்களுக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் சொந்த இடமான சிவன் கோவிலடி, ஆவரங்காலில் இன்றுகாலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

அவரது மூன்று பிள்ளைகளும் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் குருவானவர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் இடம்பெற்ற கேள்வி - பதில் வருமாறு:-

கேள்வி :- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்குமாறு கோரி கடிதம் எழுதியுள்ளீர்கள். அப்படி அப் பதவி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்கப்பட்டால் மீண்டும் நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயல்படுவீர்களா?

பதில்:-நாம்தமிழரசுக்கட்சிபோனபின்பு ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியாகச் செயற்பட்டாலும் நாடாளுமன்றில் தமிழரசுக் கட்சிக் குழுவாகவே இயங்கினோம். நாங்கள் தமிழரசுக் கட்சியை விட்டு தனியாக இயங்கப் போகின்றோம் என சபாநாயகரிடம் என்றுமே கேட்கவில்லை. ஏனெனில் தமிழ் மக்களின் பலம் பலவீனப்படக் கூடாது என்பதனாலும், 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பது அங்கீகரிக்கப்பட்டதாக இருப்பதனாலும், அதனை இழக்கக் கூடாது எனபதற்காகவுமே அதனை உடைக்கக் கூடாது எனச் செயற்பட்டோம்.

இருந்தபோதும் சட்டப்படி உடைந்தும் செயற்பட்டிருக்க முடியும். ஏனெனில குழுவின் மூன்றில் ஒரு பகுதியினர் தனித்துச் செயற்பட முடிவெடுத்தால் அது அங்கீகரிக்கப்படும். இது அடுத்த தேர்தல் வரை தொடரும்.

கேள்வி:- ஆகவே, தற்போது குழுவின் தலைவர் பதவியைக் கோருவது அடுத்த தேர்தல் வரைக்குமானதா?

பதில்:- ஆம். ஏனெனில் அடுத்த தேர்தலின் பின்னர் என்ன இடம்பெறும் என்பது தெரியாது.

கேள்வி:- அடுத்த தேர்தலின் பின்னர் என்ன இடம்பெறும் என்பது தெரியாது என்பது எவ்வாறு போட்டியிடுவீர்கள் என்பதே தெரியாதா?

பதில்:- ஆம். ஏனெனில் நாம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்றே போட்டியிடுவோம். அவர்கள் தமிழரசுக் கட்சி எனப் போட்டியிடுவார்கள். மக்கள் எவ்வாறு வாக்களிப்பர் என்பது தெரியாது. அதனால் அதனை அடுத்த தேர்தலின் பின்னர் பார்ப்போம்.

கேள்வி:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்கினால் கூட்டமைப்பு தொடர்வதற்கான சாத்தியப்பாடுகள் உண்டா?

பதில்:- இல்லை, இது தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகவே அவர் உத்தியோகபூர்வமாக இருப்பார்.

கேள்வி:-அவ்வாறானால்தமிழரசுக்கட்சியிலேயே இல்லாத வேறு கட்சித் தலைவர் தமிழரசுக் கட்சிக் குழுவின் தலைவராகச் செயற்படுவதில் நெருக்கடி காணப்படாதா?

பதில்:- அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனக் கடிதம் எழுதியுள்ளேன். ஏனெனில் நாம் கூட்டமைப்பு என்றே போட்டியிட்டோம். உத்தியோகபூர்வமாக தமிழரசுக் கட்சியின் சின்னத்திலேயே போட்டியிட்டோம். அதனாலேயே இரு பெயரையும் பயன்படுத்தியுள்ளேன்.

கேள்வி:- குழுத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தேர்வு செய்யப்படுவதில் இருந்து கூட்டமைப்பு மீண்டும் பொது வெளியில் செயற்படுமா?.

பதில்:- இல்லை.

## கூட்டமைப்பு எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கப்பட வேண்டும் என்று ரெலோவின் செயலாளர் ஜனா கோரிக்கை விடுத்திருந்தார்.

செல்வம் அடைக்கலநாதனை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராக தேர்வு செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கூட்டமைப்பின் சார்பில் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முகவரியிடப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் இந்தக் கோரிக்கையை எழுத்தில் பிரேரித்துள்ளார்.

இவற்றின் அடிப்படையில் இந்த விடயத்தை ஆராய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறும் எனக் கூட்டமைப்பின்

சகல நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும் நாடாளுமன்ற உறுப்பினரான இ.சாள்ஸ் நிர்மலநாதன் அறிவித்தல் அனுப்பியுள்ளார்.

# பெருந்தலைவர் சம்பந்தன் அவர்களுக்குக் கண்ணீர் அஞ்சலி




Date: Saturday, July 13, 2024

Time: 4:30 - 8:00 pm

Venue: Malvern Family Resources Center
90 Littles Road, Scarborough (Sewells & Morningside)

திருகோணமலை மாவட்டத்தில் ஐந்துமுறை வென்ற மக்கள் பிரதிநிதி, இலங்கைத் தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவர், இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றாண்டு காலம் ஆளுமை மிக்க எதிர்கட்சித் தலைவர், அரைநூற்றாண்டு காலமாக தமிழ் ஈழ அரசியலில் பேராளுமையாக விளங்கியவர் இராசவரோதயம் சம்பந்தன் ஐயா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பொதுக் கூட்டம்.

தேசத்தை நேசிப்போரின் அஞ்சலி உரைகள் இடம்பெறும்

கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
647-763-9410 / 416-281-1165 / 416-998-2284

கனடிய தமிழர் பேரவை
416-240-0078 / 647-300-1973




Build Your Dream Home with us....

NORTH WALL
ENGINEERING

"Experience a professional service like no other"

Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

Nelliyady, Jaffna.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தமிழரசு அவுட்!

“இல்லாத மேடை ஒன்றில்
எழுதாத நாடகத்தில்
எல்லோரும் நடிக்கின்றோம்
எல்லோரும் பார்க்கின்றோம்....”

- அபூர்வ ராகங்கள் படத்தில் வரும் ஒரு பாடலின் வரிகள் இவை.

அந்தநிலைமையில்தமிழ்அரசியல்வாதிகள் நடத்தும் அபத்த நாடகத்தை தமிழ் மக்களாகிய நாங்கள் பார்க்கும் அவல நிலைமை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒன்று இல்லை எனக் குறிப்பிட்டு, தமிழரசுக் கட்சியைத் தனித்து வெளியே விட்டு, புதுக்கூட்டு அமைத்து, வெளியேறியவை புளொட்டும் ரெலோவும்.

ஆனால், இப்போது கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழரசுக்கும் சேர்த்து நாடாளுமன்றத்தில் தலைமை வகிக்கப் போகின்றது அக்கட்சிகளில் ஒன்று. அதுதான் தமிழரசுக் கட்சியின் பரிதாப நிலைமை.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற புதுக் கூட்டமைப்பை உருவாக்கி வெளியேறிய ரெலோவுக்கும் புளொட்டுக்கும் நாடாளுமன்றத்தில் நான்கு இடங்கள்தான்.

தமிழரசு கட்சி என்ற பெயரில் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பழைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்து உறுப்பினர்களின் அறுவர் ஒரிஜினல் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

இலங்கைத் தமிழரசு கட்சி நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் பத்து உறுப்பினர்களில் ஆறு உறுப்பினர்களை வைத்திருந்தும் - பெரும்பான்மையைக் கொண்டிருந்தும் - நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் இணைத் தலைவர் ஒருவரிடம் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியை வழங்கி மண்டியிடப் போகின்றது.

அந்தத் தலைமைப் பொறுப்பை இது வரை காலமும் சம்பந்தனின் சார்பில் ஆற்றி வந்தவர் சுமந்திரன் எம்.பி.

அவரின் கையில் அந்தப் பதவி போய்விடக் கூடாது என்பதற்காக, வேறு கூட்டு அமைத்துத் தனித்துச் செயற்படும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைத் தலைவரான செல்வத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவியை சரணாகதி அடைய செய்ய தமிழரசின் ‘தன்மான’(?) தலைவர்கள் தயாராகி விட்டனர் என்று தகவல்.

பத்துப் பேர் கொண்ட நாடாளுமன்ற குழுவில் தமிழரசின் 6 பேர் அதில் பெரும்பான்மையுடன் இருந்தும் சுயாதீனமா. - சுதந்திரமாக - சுய கௌரவமாக - செயல்படும் நிலையில் தமிழரசு இல்லை என்பதுதான் அபத்தமான உண்மை.

நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தனித்துவத்தையே காப்பாற்ற முடியாத இந்தத் தமிழ்த் தலைவர்கள் தமிழினத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறார்கள் என்பதுதான் கேள்வி.

‘தேசியம்’ என்ற கண்மூடித்தனமான வாய்ச்சவடால் பேச்சில் எடுபட்டு அணி சாயும் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும் இளைய உறுப்பினர்களும் இந்தத் தமிழ்த் தலைவர்களின் உளப் போக்கை சரியாக எடை போட வேண்டும்.

கூட்டமைப்பில் வெற்றி பெற்று இப்போது நாடாளுமன்றம் போயிருக்கும் பலருக்கும், வெளியில் தோற்று நிற்கும் மாவை சேனாதிராஜா போன்றோருக்கும், அடுத்த தேர்தலில் கூட்டமைப்பாகப் போட்டியிட்டால் தான் வெற்றி கிட்டும் என்று நப்பாசை.

அதனால்தான்உள்ளூராட்சிதேர்தல் என்றதும் கூட்டமைப்பை உடைத்துப் போட்ட இரண்டு பக்கத்தினரும் இப்போது நாடாளுமன்ற த் தேர்தல்கள் நெருங்கும் போது கூட்டமைப்புக் கயிற்றை மக்களுக்கு விடுகின்றனர்.

தமிழரசுக்கட்சிக்குரியதலைமைத்துவத்தை உட்கட்சிப் பூசலுக்காக விற்பவர்களை கட்சியும் மக்களும் சரியாக அடையாளம் காண்பர்.

இல்லாத கூட்டமைப்புக்கு, ரெலோ தலைமை தாங்கி வழி நடத்தும் நாடகத்தில், தமிழரசாரும் சேர்ந்து நடிக்கின்றனர். நாங்கள் பார்க்கின்றோம். அவ்வளவுதான்...!





# அமைதிக்கான தீர்வு எதுவும் போர்க்களத்தில் கிடைக்காது

## புடினிடம் பிரதமர் மோடி தெரிவிப்பு

“ரஷ்யா – உக்ரைன் போர் காரணமாக அப்பாவிக் குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்திருப்பது மனதுக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது. போர்க்களத்தில் அமைதிக்கான எந்தத் தீர்வும் கிடைக்காது. பேச்சுவார்த்தையால் மட்டுமே அது சாத்தியம். அமைதியை கொண்டுவர இந்தியா ஒத்துழைக்கும்.”

– இவ்வாறு ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் நடந்த பேச்சுவார்த்தையின்போது பிரதமர் மோடி கூறியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் அரசு முறை பயணமாக ரஷ்யா சென்றார். இந்தியா, ரஷ்யா இடையிலான 22ஆவது உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் விதமாக பிரதமர் மோடி ரஷ்யா சென்றார். தொடர்ந்து உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக மோடியும், புடினும் அதிகாரபூர்வமாக இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். 2022 இல் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்த பிறகு இரு தலைவர்களின் முதல் சந்திப்பு இதுவாகும்.

இந்தச் சந்திப்பின்போது புடினிடம் பேசிய பிரதமர் மோடி, “ரஷ்யா – உக்ரைன் போர் காரணமாக அப்பாவிக் குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்திருப்பது மனதுக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது. போர்க்களத்தில் அமைதிக்கான எந்தத் தீர்வும் கிடைக்காது. பேச்சுவார்த்தையால் மட்டுமே அது சாத்தியம். அமைதியை கொண்டுவர இந்தியா ஒத்துழைக்கும். அமைதியை மீட்டெடுப்பதற்கு அனைத்து வழிகளிலும் ஒத்துழைக்க இந்தியா தயாராக உள்ளது.

இந்தியா அமைதியின் பக்கம் உள்ளது என்பதை நான் உங்களுக்கும் உலக சமூகத்துக்கும் உறுதியளிக்கிறேன். புதிய தலைமுறையினருக்கு ஒளிமயமான எதிர்காலத்தைப் பெற, அமைதிப் பேச்சுகள் தேவை. மாறாக வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களுக்கு மத்தியில் வெற்றி கிடைக்காது. ஜம்மு காஷ்மீரில் நடைபெற்று வரும் தீவிரவாத தாக்குதலால் கடந்த 40 ஆண்டுகளாக தீவிரவாதத்தின் சவால்களை இந்தியா எதிர்கொண்டுள்ளது. அனைத்து வகையான தீவிரவாதத்தையும் நான் கண்டிக்கிறேன்.” – என்றார்.

முன்னதாக, ரஷ்யா சென்ற பிரதமர் மோடியும், அதிபர் புடினும் பரஸ்பரம் தங்களது நட்பினை வெளிப்படுத்தினார். அப்போது ஒருவரை ஒருவர் கட்டியணைத்துக் கொண்டனர். இந்த படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகிய நிலையில், இதனை மேற்கோள்காட்டி, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“உக்ரைனில் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 37 பேர் உயிரிழந்தனர். அதில் மூவர் சிறுவர்கள். 170 பேர் காயமடைந்துள்ளனர். உக்ரைனில் அமைந்துள்ள மிகப் பெரிய குழந்தைகள் மருத்துவமனை மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியது. இளம் புற்றுநோயாளிகள் தான் அவர்களது இலக்கு. பலர் அதன் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் தலைவர் ஒரு உலகில் கொடுங்கோன்மை செயல்களை செய்யும் குற்றவாளியை மாஸ்கோவில் கட்டி அணைப்பதை பார்க்கும்போது அமைதி முயற்சிகளுக்கு பெரும் ஏமாற்றம் தருவதாக அமைந்துள்ளது” என வேதனை தெரிவித்தார்.

உக்ரைனின் ஐந்து நகரங்களின் மீது நேற்று முன்தினம் ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தியது. 40 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகள் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் முக்கிய கட்டடங்களை தாக்கியது. இதில் அந்த குழந்தைகள் மருத்துவமனையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# மோடிக்கு ரஷ்யாவின் உயரிய விருது: ஜனாதிபதி விளாடிமிர் புடின் வழங்கினார்



உத்தியோகபூர்வ விஜயமாக ரஷ்யா சென்றுள்ள பிரதமர் மோடிக்கு அந்த நாட்டின் உயரிய விருதான ‘ஆர்டர் ஆஃப் செயிண்ட் அப்போஸ்ஸல்’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி, இரண்டு நாள்கள் பயணமாக ரஷ்யா சென்றுள்ளார். மாஸ்கோவில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. 22 ஆவது இந்திய – ரஷ்ய உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட அவர் ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் இருநாட்டு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடினார்.

இந்த நிலையில், ரஷ்ய அரசு சார்பாக பிரதமர் மோடிக்கு ‘ஆர்டர் ஆஃப் செயிண்ட் அப்போஸ்ஸல்’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இது ரஷ்யாவின் மிக உயரிய விருதாக கருதப்படுகிறது. இந்தியா – ரஷ்யா இடையிலான நட்புறவை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்கு இந்த விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை ரஷ்ய ஜனாதிபதி புடின் வழங்கினார்.

இந்த விருது குறித்து பேசிய பிரதமர் மோடி குறிப்பிடுகையில்,

“இது 140 கோடி இந்தியர்களுக்கான கௌரவம் மற்றும் நூற்றாண்டுகள் கடந்த இருநாட்டு நட்பின் இலக்கணம். கடந்த 25 ஆண்டுகளில் ஜனாதிபதி புடினின் தலைமையில் இந்திய – ரஷ்ய உறவுகள் வலுப்பெற்றுள்ளன. இரு நாட்டு மக்களின் சிறந்த எதிர்காலத்திற்காக, மக்களிடையேயான கூட்டாண்மையை நாம் மேலும் ஊக்குவிக்கவும் ஆதரிக்கவும் வேண்டும்.

இந்தியா – ரஷ்யா நட்பு மிகவும் முக்கியமானது. அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு நாம் தொடர்ந்து ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த திசையில் நாம் தொடர்ந்து செயல்படுவோம்.” என்று தெரிவித்தார்.

இயேசுவின் முதல் அப்போஸ்தலரும், ரஷ்ய துறவியுமான செயிண்ட் ஆண்ட்ரூவின் நினைவாக, 1698ஆம் ஆண்டு பேரரசர் ஜா பீட்டர் தி கிரேட் ‘ஆர்டர் ஆஃப் செயிண்ட் அப்போஸ்ஸல்’ விருதை அறிமுகம் செய்தார்.

# தனது சம்பளத்தை 40 வீதத்தால் குறைத்தார் லைபீரிய ஜனாதிபதி

லைபீரிய ஜனாதிபதி ஜோசப் போகாய் தனது சம்பளத்தை 40 வீதத்தால் குறைப்பதாக அறிவித்துள்ளார்.

பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்திற்கான ஒரு முன்மாதிரி செயற்பாடாக இந்த தீர்மானம் இருக்கும் என அவர் நம்புவதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள் தொடர்பில் லைபீரிய பிரஜைகளிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ள நிலையில், அரசாங்க தரப்பினருக்கு வழங்கப்படும் சம்பளம் தொடர்பில் தீவிரமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தமது வருடாந்த சம்பளமான 13,400 டொலர் தொகையை 40 வீதத்தால் குறைத்து 8,000 டொலராக பெற்றுக் கொள்ளவுள்ளேன் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.



லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் வேக் தனது சம்பளத்தில் 25 வீத குறைப்பை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# துருக்கியில் 7 அகதிகளின் சடலங்கள் மீட்கப்பட்டன

துருக்கியின் மேற்கு கடலோர நகரமான செஸ்மிக்கு அருகிலுள்ள தீவொன்றிலிருந்து 7 அகதிகள் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயணித்த படகு விபத்துக்குள்ளானதாகத் துருக்கி உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் 19 அகதிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். ஒருவர் காணாமல் போயுள்ளதுடன் அவரை மீட்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவர்கள் அனைவரையும் மீட்பதற்காக உலங்கு வானூர்தி ஒன்றும் 4 படகுகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன என துருக்கி உள்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# ஹிஸ்புல்லாவுக்கு முழு ஆதரவு; ஈரான் புதிய ஜனாதிபதி உறுதி

ஹிஸ்புல்லாவுக்கு முழுமையான பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளை வழங்கவுள்ளதாக ஈரானின் புதிய ஜனாதிபதி மசூத் பெசெஸ்கியன் உறுதியளித்துள்ளார்.

ஈரானில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில், சீர்திருத்தவாத கட்சி வேட்பாளர் மசூத் பெசெஸ்கியன் வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

இந்த நிலையில், இஸ்ரேல் – காசா போர் குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர்,

ஈரானின் அரசு ஊடகமொன்றினூடாக, ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் அமைப்புக்கு, ஈரான் அரசு முழு ஆதரவு வழங்குவதாக அவ்வமைப்பின் தலைவர் ஹாசன் நஸ்ரல்லாவுக்கு உறுதியளித்துள்ளார்.

இந்த ஆதரவானது இஸ்லாமியக் குடியரசாக விளங்கும் ஈரானின் அடிப்படை கொள்கைகளில் ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பலஸ்தீனத்தின் காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டுள்ள அட்டூளியங்களை நிறுத்த ஹிஸ்புல்லா போன்ற எதிர்ப்பு இயக்கமே தீர்வு என்பதில் தான் உறுதியாக உள்ளதாகவும் ஈரானின் புதிய ஜனாதிபதி மசூத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஹிஸ்புல்லாவுக்கு ஆதரவு அளித்து



வரும் ஈரான், லெபனான் மீது இஸ்ரேல் போர் தொடுத்தால் இஸ்ரேலுக்கு தக்க பதிலடி கொடுப்போம் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேலுக்கு அருகாமையில் அமைந்துள்ள லெபனானில் ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் அமைப்பு இயங்கி வருகின்றது.

ஹமாஸ் அமைப்பை ஒழிப்பதாக கடந்த 8 மாதங்களாக பலஸ்தீனிய நகரங்கள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், லெபனான் எல்லையில் இருந்து இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அவ்வப்போது தாக்குதல் நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# நாணயத்தாள்களைக் காலால் மிதித்த தியாகி நிறுவுநர் பிணையில் விடுவிப்பு

(ந.லோகதயாளன்)

இலங்கை நாணயத்தாள்களைக் காலால் மிதித்து அவமானப்படுத்திய குற்றச்சாட்டில் தியாகி அறக்கொடை நிறுவுநர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்த ராஜா முன்னிலையில் ஆஜராகிய பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவரது உடல் சோர்வே நாணயத்தாள்களை மிதித்தமைக்குக் காரணம் என்று அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வி.திருக்குமரன் முன்வைத்த காரணத்தை ஏற்க நீதிவான் மறுத்தார்.

மனநிலையை வைத்து அவர் நீதிமன்றத்துக்குக் கல் எறிந்தால் ஏற்றுக்கொள்வீர்களா என்றும், அவரது செயற்பாடு பற்றிய காணொலியை வெளியிட்டால் ஏற்றுக்கொள்வீர்களா? என்றும் நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.



# மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலே புதிய பதில் வைத்திய அத்தியட்சகர் செயற்படுவார்

## பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் நம்பிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை தொடர்பில் பொதுமக்கள் வைத்துள்ள எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையிலே புதிய பதில் வைத்திய அத்தியட்சகரின் செயற்பாடுகள் அமையும் என்று யாழ். பிராந்திய சுகாதர சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நேற்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகரின் கடமையேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ரஜீவ் மத்திய சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டு தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்த வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளை அவர் தொடர்ந்தும் முன்னெடுப்பார். இந்தப் பிரதேச மக்கள் வைத்தியசாலையில் வைத்திருக்கின்ற எதிர்பார்ப்புக்களை நாங்கள் அறிவோம். அத்தகைய எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்கின்ற வகையிலையே அவர் தனது கடமைகளை முன்னெடுத்துச் செல்வார்.

இந்த வைத்தியசாலையைப் பொறுத்த வரையில் நிச்சயமாக இந்தத் தென்மராட்சி பிரதேசம் மட்டுமல்ல யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும், அதேபோல் கிளிநொச்சியின் ஒருபகுதி குறிப்பிட்டளவான மக்களுக்கு என ஏராளமான மக்களுக்கும் சேவையாற்றி வருகின்றது.

ஆகவே, இந்த வைத்தியசாலையின் மீது மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் நாங்கள் அறிவோம். இவ்வாறான நிலைமையில் அந்த எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் புதிய அத்தியட்சகர் இங்கு தன்னுடைய கடமைகளை முன்னெடுத்துச் செல்வார்.

அவருக்குத் தேவையான ஒத்துழைப்புக்களைப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மூலமும், மாகாண சுகாதாரப் பணிமனை மூலமும், மத்திய சுகாதார அமைச்சின் மூலமும் வழங்குவதற்குத் தயாராகவே இருக்கின்றோம்."
- என்றார்.



வ.தில்லைநடராசா

# ஆற்றலால் உயர்ந்த பெண் ஆளுமை...!

# திருமதி ரூபினி வரதலிங்கம்

(இலங்கை நிர்வாக சேவையின் அதிவிசேட தர அதிகாரியான திருமதி ரூபினி வரதலிங்கம் இன்று (10.07.2024) ஆம் திகதியுடன் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.)

பிறப்புக்கும் இறப்பிக்கும் இடையிலான வாழ்க்கைப் பயணத்தில் எத்தனையோ மனிதர்களை சந்திக்கின்றோம். எல்லாச் சந்திப்புக்களும் நினைவில் நிலைப்பதும் இல்லை, மகிழ்வைத் தருவதும் இல்லை. சில சந்திப்புக்கள் மட்டுமே தெய்வ சித்தம் என எண்ணத் தோன்றுகின்றது.

அந்த வகையில் சம்பவம் ஒன்று என்னை நெகிழ வைத்தது. ஒருமுறை போர்க்காலச் சூழலில் யாழில் இருந்து கொழும்புக்கு விமானத்தில் பயணிக்கும் போது யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தைக் கண்டு உரையாடும் நல்ல வாய்ப்பை இறைவன் எனக்கு அருளினான் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

கிராம சேவையாளராக நான் கடமையாற்றிய காலத்தில் அவர்களுக்கு கீழ் பணியாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டவில்லை. எனினும் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிராம சேவையாளர்களுக்கான முகாமைத்துவ பயிற்சித் திட்டத்தில் நானும் ஒரு பயிற்றுவிப்பாளர் என்ற வகையில் அவருடன் சேவையாற்றும் ஒரு சந்தரப்பம் கிடைத்தது.

"பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாரதியாரின் வாக்குக்கு இணங்க சிறந்த கல்வியைப் பெற்று உயர்தொழில் வகிக்கும் திருமதி ரூபினி வரதலிங்கம், ஊர்காவற்றுறை காவலூரை பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை சண்முகநாத வித்தியாலயத்திலும் உயர்கல்வியை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் மேற்படிப்பை இந்தியாவிலும் கற்றவர்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே, சான்றோனாக்குதல் தந்தைக்கு கடன்" என்ற கூற்றுக்கு இணங்க சிறுவயதில் தந்தையை இழந்தவர். தாயாரின் வளர்ப்பிலேயே இவரும் இரு சகோதரிகளும் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றனர். அது மட்டுமல்லாது ஆன்மீக வாழ்க்கை எப்பொழுதும் ஒருவனை நேரிய வழியில் இட்டுச் செல்லும் என்பதற்கிணங்க இறையன்பு, ஒழுக்கம் என்பவற்றிலும் சிறந்து விளங்கினார்.

இவர் கல்வி கற்கும் காலப்பகுதியில் ஆளுமையை வளர்க்கும் கல்விசார் இணைச் செயற்பாடுகளிலும் பல போட்டிகளிலும் பங்குபற்றி பல பரிசில்களையும் பெற்றவர். மாணவப் பருவத்தில் பல பொறுப்புக்களையும் முன்னின்று ஏற்று திறம்பட நடத்தியமையால் தற்போதைய இவரின் பதவி நிலைக்கு அது உந்து சக்தியாக அமைந்துள்ளது.

மேலும் இவர் தான் கற்ற பாடசாலையில் ஆசிரியராக இணைந்து கடமையாற்றினார். பின்னர் இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 1991 இல் தனது முதலாவது நியமனத்தை கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி உதவி அரச அதிபராக பதவி வகிக்க ஆம்பித்தார்.

அதன் பின்னர் யாழ். மாவட்டத்தில் சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும், பிரதேச செயலாளராகவும் பதவிகளையும் வகித்துள்ளார். பின் வடக்கு, கிழக்கு மாகாண சபையில் பணிப்பாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், செயலாளர் பதவிகளையும் வகித்துள்ளார். இவ்வாறு 22 வருடங்கள் அரச சேவையில் பிரதேச மாவட்ட, மாகாண மாவட்டங்களில் கடமையாற்றியுள்ளார். இந்தக் காலப் பகுதியில் பல சிரேஷ்ட நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் கீழ் கடமையாற்றி அவர்களிடமிருந்து பல நல்ல விடயங்களையும் கற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் தொழில்சார் கல்வி நெறிகளில் தேர்ச்சி பெற்றுக் கொள்ளும் முகமாகப் பொது முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் டிப்ளோமா பட்டங்களையும் பொதுநிர்வாக துறையில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

"சிலர் கதிரைகளால் பெருமை அடைகின்றார்கள். சிலரால் கதிரை பெருமை அடைகின்றது"

அந்த வகையில் திருமதி ரூபினி வரதலிங்கத்தின் பணிகளால் யாழ். மாவட்டம் பெருமை அடைகின்றது. அதிகாரம் இருக்கின்ற இடத்தில் அதி "காரம்" இருக்கக் கூடாது என்பர். தான் ஒரு "மக்கள் சேவகி" என்பதை மனதில் நிலை நிறுத்தியே அவரின் பணிகள் தொடர்கின்றது என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

"விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார் பெறின்" என்ற வள்ளுவன் வாக்குக்கு இணங்க நல்ல கட்டளை இடும் அதிகாரியாகச் செயற்படுவார். நல்ல அதிகாரி மட்டுமல்ல நல்ல மனைவி, நல்ல தாய், நல்ல சுற்றம் என பல பாத்திரங்களை பண்புடன் வகிப்பவர்.

இளைப்பாறினாலும் பெண்களின் வலுவூட்டலுக்கான அலரது பணிகள் அந்த மண்ணில் தொடரவேண்டும் . அவர் இவ் அமைச்சில் இருந்த காலத்தில் மாவட்டச் செயலகங்களுடன் இணைந்து பெண்களின் கருத்துகளை மற்றும் பிரச்சினைகளை முன்வைக்கும் ஊராட்சிக் கூட்டங்களை சிறப்பாக நடத்தியிருந்தார். சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் போது பெண் சாதனையாளர்களைக் கௌரவிக்க அவர் முன்னின்று உழைத்திருக்கிறார்.

பெண்கள் கல்வி அறிவு பெற்றவர்களாக இருந்தால் மாத்திரம் போதாது. எங்கெல்லாம் பெண்களின் சேவை முத்திரை பதிக்கப்பட வேண்டும் என்பதற்கு இணங்க அவரின் சேவை யாழ். குடாநாட்டுக்குத் தேவை என்பது பலரது விருப்பமாகும். அவரின் சேவைகள் மண்ணில் நல்ல வண்ணம் தொடர வாழ்த்துவதுடன்எல்லாம்வல்லஇறைவன்உடல்உளபலத்தையும்அவருக்கு அருள வேண்டும் எனப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" –அப்பரடிகள்.

வ. தில்லைநடராசா,
ஓய்வுநிலை கிராம அலுவலர்,
ஜே–80 பெரியகடை, ஜே–81 கோட்டை.





# நாடு கடலால் சூழப்பட்டிருந்தாலும் மீன் வளத்தில் தன்னிறைவு இல்லை

## ஸ்மார்ட் மீனவர்களை உருவாக்குவோம் என்கிறார் சஜித்

முழு நாடும் கடலால் சூழப்பட்டிருந்தாலும் மீன் உற்பத்தியில் நம்மால் தன்னிறைவு அடைய முடியாமல் இருப்பது குறித்து வெட்கப்பட வேண்டும். மீன் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாமல் போனமையினால் மீன் வளங்கள் இறக்குமதி செய்ய நேரிட்டுள்ளது. இந்த கடல் வளத்தைப் பயன்படுத்தி, மீன்பிடித் தொழிலைப் பாதுகாத்து, அதிக வருமானம் பெறும் தொழிலாக மாற்ற வேண்டும். இங்கு சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளைப் பெற்று மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதற்கான பக்கபலத்தை பெற்றுத் தருவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 300 ஆவது கட்டமாக 11 லட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன வன்னி, மன்னார் வங்காலை புனித அன்னாள் கல்லூரி வழங்கி வைக்கும் நிகழ்வ. நேற்று முன்தினம் ஜூலை 08 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை நூலகத்திற்குத் தேவையான ஆங்கில நூல்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்கு பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு ஒரு லட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது மீன்பிடி தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் உபகரணங்களின் விலை அதிகரிப்பு போலவே வெளிநாட்டு மீனவர்களால் மீன் எமது வளம் சவாலுக்கு உள்ளாகி இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மீன்பிடித் தொழிலை ஸ்மார்ட் மீன்பிடித் தொழிலாக மாற்றி, மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களை ஸ்மார்ட் மீனவர்களாக உருவாக்கும் முயற்சியை நாம் எடுப்போம். மீன்பிடித் தொழிலை நவீனப்படுத்தவும், புதுமைப்படுத்தவும், மேம்படுத்தவும் முயற்சிகளை மேற்கொள்வோம். – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உலகம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும்போது எந்த மாற்றமும் செய்யாமல் பழைய முறையையே தொடர்ந்தால் நாம் பின்னோக்கியே செல்வோம். பிள்ளைகள் ஓரம்கட்டப்படும் நிலை உருவாகும். எனவே, உரிய நவீன கல்வியை பிள்ளைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சி ▼







# நாடு கடலால் சூழப்பட்டிருந்தாலும் மீன் வளத்தில் தன்னிறைவு இல்லை

தொடர்ச்சி▲















# நவாலி தேவாலயத் தாக்குதலின் 29 ஆவது வருட நினைவு நேற்று

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீதான விமான தாக்குதலின் 29 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று மாலை சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவு கூரப்பட்டது.

சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் நேற்று மாலை பங்குதந்தை அன்ரனிதாஸ் தலைமையில் வழிபாடுகள் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து தேவாலயத்தின் அருகில் அமைக்கபட்டுள்ள நினைவுதூபியில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பிரமுகர்கள், மலரஞ்சலி செலுத்தி ஈகைசுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்

1995 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 09 ஆம் திகதி நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி சிறிய கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானபடையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகள் வீசியதில் 147 பேர் பலியாகினர். 350 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.













# பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடாத அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு



கடந்த இரு தினங்களாக கடமைக்கு சமுகமளித்த நிறைவேற்றுத்தரம் அல்லாத அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் விசேட சம்பள உயர்வை வழங்குவதற்கும் எதிர்கால பதவி உயர்வுகளுக்கு பயன்படுத்தும் வகையில் விசேட பாராட்டு சான்றிதழை வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண பிரதான செயலாளர்களுக்கு அறிவிக்குமாறும் அது தொடர்பிலான சுற்றுநிருபம் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அரச சேவையின் நிறைவேற்றுத்தரம் அல்லாத சில சேவைகளில் உள்ள ஒருசில தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினமும், நேற்றும் சுகவீன விடுமுறை மற்றும் வேலை நிறுத்த தொழிற்சங்க நடவடிக்கைகளை அறிவித்திருந்தன.

கடுமையான பொருளாதார ஸ்திரமின்மையை எதிர்நோக்கியிருந்த நாடு கடந்த 2 வருடங்களில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட விரிவான பொருளாதார கொள்கை சீர்திருத்த வேலைத்திட்டத்தின் ஊடாக ஓரளவு ஸ்திரப்படுத்த முடிந்ததுடன், மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா மாதாந்த கொடுப்பனவையும் அரசாங்கம் வழங்கியது.

தற்போதைய நிதி நிலைமையின் கீழ், மக்கள் மீது கூடுதல் வரிச்சுமையை சுமத்தாமல், முழு அரச சேவைக்கும் தற்போது வழங்கப்படும் சம்பளத்திற்கு மேலதிகமாக சம்பள அதிகரிப்பையோ கொடுப்பனவுகளையோ வழங்குவதற்கு சாத்தியமில்லை எனவும் திறைசேரி செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நியாயமற்ற பணிப் புறக்கணிப்புகளில் ஈடுபடாது, நேற்று முன்தினமும், நேற்றும் பணிக்கு சமுகமளித்த நிறைவேற்றுத்தரம் அல்லாத அரச உத்தியோகத்தர்களை பாராட்டுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



# மன்னார் பிரதானப் பாலத்தடியில் இருந்து அகற்றப்பட்ட இராணுவச் சோதனைச் சாவடி மீண்டும் அங்கு உருவாக்கம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் பிரதான பாலத்தடியில் சில வருடங்களாகக் காணப்பட்ட இராணுவச் சோதனைச் சாவடி கடந்த சில வாரங்களுக்கு முன் அகற்றப்பட்ட நிலையில் மீண்டும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு – அத்துருகிரிய பிரதேசத்தில், நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்த நிலையில் பலர் காயமடைந்துள்ளனர்.

எனினும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் மன்னாரிற்குச் சென்று, தலைமன்னார் ஊடாக இந்தியாவுக்கு தப்பிச் செல்ல உள்ளனர் எனப் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளனவாம்.

அதற்கு அமைவாக அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மன்னாருக்கு சென்று இந்தியாவிற்கு கடல் மார்க்கமாக தப்பிச் செல்ல சந்தர்ப்பங்கள் உள்ளன.

அதன் அடிப்படையில் மன்னாருக்குச் செல்லும் பிரதான பாலத்தடியில் விசேட இராணுவ சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக வேறு மாவட்டங்களில் இருந்து மன்னாரிற்குள் நுழைகின்ற சந்தேகத்திற்கு இடமான வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# அத்துருகிரிய துப்பாக்கிச் சூடு; சந்தேகத்தில் ஏழு பேர் கைது!




வர்த்தகரான 'க்ளப் வசந்த' என அழைக்கப்படும் வசந்த பெரேரா உள்ளிட்ட தரப்பினர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் வசிக்கும் இருவரின் வழிநடத்தலில் இந்தத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் தலைமையில் 5 பொலிஸ் குழுக்கள் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துருகிரிய சந்தியிலுள்ள வர்த்தக நிலையத்தில் நேற்று முன்தினம் முற்பகல் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், 'க்ளப் வசந்த' மற்றும் நயன வசுல விஜேசூரிய என்ற 37 வயதான நபர் ஆகியோர் உயிரிழந்தனர்.

துப்பாக்கி பிரயோகத்தில் பாடகி கே.சுஜீவா மற்றும் க்ளப் வசந்தவின் மனைவி உள்ளிட்ட நால்வர் காயமடைந்தனர்.



# 2025 வரவு - செலவுத் திட்டம் யோசனை தயாரிக்கும் நடவடிக்கைகள் விரைவில்!

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட யோசனையை தயாரிக்கும் நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக அரச நிறுவனங்களின்

**நிதியமைச்சு தகவல்**

வரவு - செலவு அறிக்கைகளை கோர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய மதிப்பீட்டு அறிக்கைகளை கோரும் நடவடிக்கைகளும் அதே சந்தர்ப்பத்தில் முன்னெடுக்கப்படுமென நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# சாவகச்சேரி வைத்தியசாலைச் செயற்பாட்டைக் குழப்பி பொறுப்பற்றுச் செயற்பட்டோர் தண்டிக்கப்பட வேண்டும்

## அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து




சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வினைத் திறனுடன் இயங்குவதை விரும்பாத சக்திகளே கடந்த சில தினங்களாக அங்கு நிலவிய அசாதாரண சூழலுக்கும், மக்கள் போராட்டத்திற்கும் காரணம் என்று அமைச்சரவையில் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விசாரணைக் குழு அமைக்கப்பட்டு , சீர்கேடுகளுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட குறித்த விடயத்தினை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தவை வருமாறு:-

"சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராக கடந்த ஜுன் மாதம் நியமிக்கப்பட்ட வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன், அங்கு நிலவி வந்த நிர்வாக சீர்கேடுகளையும், குறைபாடுகளையும் அடையாளம் கண்டு அவற்றை சீர்செய்வதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

அதனடிப்படையில், பெண் நோயியல் பிரிவு, சந்திர சிகிச்சை பிரிவு, ஐ.சி.யு. பிரிவு ஆகியவற்றை செயற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட 3 மாடிக் கட்டடம் கடந்த 14 வருடங்களாக பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், நன்கொடையாளரினால் வழங்கப்பட்ட 20 மில்லியன் ரூபா பெறுமதியான சத்திர சிகிச்சை உபகரணங்களும் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலையில், அவற்றை செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட வைத்திய அத்தியட்சகர், முதற் கட்டமாக ஐ.சி.யு. மற்றும் மகப்பேற்று பிரிவு ஆகியவற்றை செயற்படுத்தியுள்ளார்.

மேலும், சந்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில் சத்திர சிகிச்சை பிரிவை இயக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதேபோன்று, குறித்த வைத்தியசாலையில் உயிரிழப்பவர்களின் உடல்கள், உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில், அதனை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மேற்கொண்டு, பொது மக்களுக்கு ஏற்பட்டு வந்த தேவையற்ற அசௌகரியங்களை தடுப்பதற்கும் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனாவினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், மருந்துப் பொருள்கள் உரிய களஞ்சியப்படுத்தல் ஏற்பாடுகள் இன்றி, தரையில் போடப்பட்டிருந்தன. இந்த வைத்தியசாலையில் 22 வைத்தியர்கள் கடமையாற்றி வந்தமையுடன், அவர்களுள் பெரும்பாலானவர்கள், மாதத்தில் 10 நாள்கள் மாத்திரமே வைத்தியசாலையில் கடமையாற்றியுள்ளனர்.

இவ்வாறான பல்வேறு சீர்கேடுகள் மற்றும் குறைபாடுகளை தீர்ப்பதற்கு வைத்திய அத்தியட்சகர் முன்னெடுத்த முயற்சிகளை விரும்பாத சக்திகள், அங்கு தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன.

இவை அனைத்தையும் அறிந்து கொண்ட பொது மக்கள் பாரிய போராட்டம் ஒன்றினையும் முன்னெடுத்தனர்.

எனவே, குறித்த விவகாரம் தொடர்பில் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டு நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட அனைவரும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட வேண்டும்" என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடற்றொழில் அமைச்சரின் ஊடகப் பிரிவு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

# திட்டமிட்டவாறு ஓய்வூதிய கொடுப்பனவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது



அரச துறையைச் சேர்ந்த சிலர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள போதிலும், ஜுலை 10 ஆம் திகதியன்று பதிவு செய்யப்பட்ட 7 லட்சத்து 8 ஆயிரத்து 231 ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியக் கொடுப்பனவை வங்கிகளுக்கு ஒப்படைத்துள்ளதாக ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜகத் டி.டயஸ் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 24 அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கும் தபால் திணைக்களத்திற்கும் 28.5 பில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் 99.5 வீதமான மக்கள் ஜுலை 10 ஆம் திகதி ஓய்வூதிய கொடுப்பனவை தாமதமின்றி பெற்றுக் கொள்வார்கள் எனவும், ஜுலை 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் பிரதேச செயலகங்கள் தமது கடமைகளை நிறைவேற்றாததால் மிகக் குறைந்த எண்ணிக்கையான சுமார் 13,000 பேர் மாத்திரம் ஜுலை 11 ஆம் திகதி தமது ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வார்கள் என்றும் ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# அஸ்வெசும 2 ஆம் கட்ட தகவல் கணக்கெடுப்பு ஜூலை 15 முதல் 30 வரை முன்னெடுக்கப்படும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்ட தகவல் கணக்கெடுப்பு பணிகள் ஜூலை 15 முதல் 30 வரை முன்னெடுக்கப்படவுள்ளன என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

முதலாம் கட்டத்தில் தகுதி பெற்ற 18 லட்சத்துக்கும் அதிகமானோரைத் தவிர இரண்டாம் கட்டத்திற்காக 450,924 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறப்பட்டுள்ளன. அவற்றில் நலன்புரி நன்மைகள் பெறத் தகுதியானவர்களை இனங்காணும் பணிகள் இம்மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும்.

அஸ்வெசும திட்டத்தின் முதல் கட்டத்திற்கு 1,854,000 பேர் தகுதி பெற்றுள்ளனர். இதற்காக 58.5 பில்லியன் ரூபா




அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியாதவர்கள் அல்லது தவறியவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க, நலன்புரி நன்மைகள் சபை சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

மாற்றுத் திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், வறியவர்கள், மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஏழைகள் ஆகிய 04 சமூகப் பிரிவுகளின் கீழ் 'அஸ்வெசும' நலன்புரி வழங்கப்படுவதோடு ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு வழமை போன்று கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறன.

இதனிடையே, களத் தகவல் சேகரிப்பை திறம்படச் செய்ய Photo, Map, Voice Recording உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய புதிய கைபேசி மென்பொருள் (Mobile App) ஒன்றை நலன்புரி நன்மைகள் சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, கைபேசி மென்பொருளின் ஊடாக தகவல் சேகரிப்பை முன்னோடி திட்டமாக கொழும்பு பிரதேச செயலக பிரிவில் நடைமுறைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லும் 'விஷன் 2030' ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது



2030 ஆம் ஆண்டாகும்போது இலங்கையை நிலையான மற்றும் முழுமையான அபிவிருத்தியை நோக்கி வழிநடத்தும் வகையில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் தயாரிக்கப்பட்ட விரிவான கொள்கைகளை உள்ளடக்கிய ஆவணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

'விஷன் 2030' ஊடாக அடுத்த ஐந்து ஆண்டுகளில் பொருளாதார ரீதியில் இலங்கை எந்தத் திசையில் பயணிக்க வேண்டும் என்பது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதற்காக அனைத்து துறைகளிலும் கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் குறித்தும் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நன்மைகள் குறித்தும் இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மொத்த தேசிய உற்பத்தியில் 6.5 வீத வளர்ச்சி வீதத்தை எட்டுவது, பணவீக்கம், வேலையின்மை ஆகியவற்றை 5 வீதமாக குறைப்பது, கல்வி மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துவது, விவசாயம் மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவது உள்ளிட்ட நோக்கங்களை முன்னிலைப்படுத்தி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அரச – தனியார் கூட்டு முயற்சி, ஒழுங்குமுறை சீர்திருத்தம், உட்கட்டமைப்பு முதலீடு, காலநிலை மாற்றம் ஆகிய துறைகளில் எவ்வாறு தயாராக வேண்டும் என்பதையும் இந்த ஆவணம் விளக்கியுள்ளது.

இந்த நிகழ்வில், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் துமிந்த ஹுலங்கமுவ, உப தலைவர் கிரிஷான் பாலேந்திரா, பிரதி உப தலைவர் பிகுமல் தேவதந்திரி, பணிப்பாளர் சபை உறுப்பினர் சுபுன் வீரசிங்க, செயலாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி புவனேகபாகு பெரேரா, பிரதி செயலாளர் நாயகம் மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரி அலிகி பெரேரா, சஞ்சய் ஆரியவன்ச, மஞ்சுள டி சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தேர்தலில் வெற்றி பெற முடியாத சில தரப்பினர் ஸ்திர நிலையை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர்

## நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவிப்பு



"தேர்தலில் வெற்றிபெற முடியாத சில தரப்பினர் நாட்டின் ஸ்திர நிலையை சீர்குலைக்கும் வேலை நிறுத்தங்களை ஆரம்பித்து வருகின்றனர். எந்தெந்தக் குழுக்கள் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றன என்பதை மக்கள் அடையாளம் காண வேண்டும். மக்கள் மீண்டும் தவறு செய்தால், அதனை மாற்றியமைக்க முடியாது."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே வஜிர அபேவர்தன எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"சுதந்திரத்திற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் நாட்டுக்காக அதிகபட்ச பணிகளைச் செய்தது என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் பலவீனங்களும் இருந்தன. எவ்வாறாயினும், சுதந்திரத்தின் பின்னர் தொடர்ச்சியாக இருந்த ஆட்சியின் பலவீனங்களைத் தீர்க்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

உதாரணமாக, அரசமைப்பின் 27 மற்றும் 28 ஆவது பிரிவுகளில் அரச கொள்கையை வழிநடத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கடமைகள் என்பன குறிப்பிடுகின்றன. இது பொது மக்களுக்கு எப்படி உரிமைகளை வழங்குவது என்பது பற்றியது.

எவ்வாறாயினும், 27 மற்றும் 28இல் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், 29 ஆவது பிரிவில் எந்தப் பொறுப்புக் கூறலும் ஏற்படாமலும் ஜனநாயக அரசியலைப் பாதுகாக்க சட்டத்தால் எந்த உரிமைகளும் ஒதுக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, எந்த நீதிமன்றமோ அல்லது நீதிபதியோ, அரசியல்வாதிகளினால் கூறப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்பில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது, இந்த நிலைமையில்தான் நாட்டின் அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி நாட்டை காலாகாலமாக வீழ்ச்சியடையச் செய்து வருகின்றன.

இந்நிலையை மாற்றியமைக்க வேண்டியதன் காரணமாக தற்போதைய ஜனாதிபதி, அரசமைப்பின் 27, 28 மற்றும் 29 ஆகிய பிரிவுகளை பொறுப்புக் கூறக்கூடிய வகையில் பொருளாதார மாற்ற சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். 165 பக்கங்களைக் கொண்ட இந்த சட்டமூலம் இரண்டு கோடி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 148, 149, 150, 151, 152 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுமக்களால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினரின் முக்கிய பொறுப்பு அரச நிதி தொடர்பான பொறுப்பாகும்.

அரசியல் கட்சிகள் அவ்வப்போது வெளியிடும் பொய்யான அறிக்கைகளால் அந்த நிதிப் பொறுப்பு வலுவிழக்கிறது. அந்த நிலையைத் தடுக்கும் வகையில், அரசியல் கட்சிகள் கூறுகின்ற விடயங்களின் உண்மை நிலையை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக வரவு செலவுத்திட்ட அலுவலக சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் நின்றுவிடாமல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசமைப்பில் உள்ள அந்தப் பிரிவை பலப்படுத்தும் வகையில் பொருளாதார பரிமாற்ற சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதன்படி அரசியல் கட்சிகளின் பொய்களைக் கூறும் சகாப்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2021 ஜூன் 23 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர், நாடு வீழ்ச்சியடைந்து வருகிறது, நாம் கவனமாக செயல்பட வேண்டும் என்று கூறினார். மேலும், விரைவில் சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்ல வேண்டும் என்றும் நாடு செல்லும் பாதையை மாற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார். ஆனால் அதை அப்போதைய ஆட்சியாளர்கள் நிறைவேற்றாதமையால் இறுதியில் அந்த ஆட்சி செயலற்றுப் போனது.

அதன்பின்னர், 2022 மே மாதம் 12 ஆம் திகதி, நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனத்தை மட்டுமே வகித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமராகப் பதவியேற்றார். பின்னர், அரசமைப்பின் படி, ஜூலை 20 ஆம் திகதி, நாடாளுமன்றத்தில் அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவுடன், அவர் 134 வாக்குகளைப் பெற்று, எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

அத்துடன், இரண்டு வருடங்களுக்கு முன்னர் வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி,சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வந்தார். ஆனாலும் இந்தப் பிரச்சினை இன்னும் முடிந்துவிடவில்லை. தற்போது வெளிநாட்டுக் கடனை அடைக்க 2027 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சுமார் 500 கோடி டொலர்கள் வெளிநாட்டுக் கையிருப்பு உள்ளது. இலங்கைப் மக்களுக்கு வாழ்வளித்து, அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களை ஆரம்பித்து நாட்டைக் கட்டியெழுப்பும் இலக்குகளை பொருளாதார பரிமாற்றச் சட்டம் வழங்கியுள்ளது. அதன்படி, 2027 ஆம் ஆண்டுக்குள் பொருளாதார வளர்ச்சி 5 வீதம் என்ற இலக்கில் பேணப்பட வேண்டும் என்று சட்டம் நிர்ணயித்துள்ளது.

இத்துடன் நின்றுவிடாமல் ஜனாதிபதி, 2030 ஆம் ஆண்டிலும், 2042ஆம் ஆண்டிலும் யார் நாட்டை ஆட்சி செய்தாலும் அந்த அரசியல் கட்சிகளின் பொறுப்பு, சட்டமாக்கப் பட்டுள்ளது. மேலும் நாம் கவனமாக செயற்பட வேண்டியுள்ளது. யாரேனும் இம்முறை நாட்டை தவறின் பக்கம் தள்ளினால் நாம் அவர்கள் யார் என்பதை அடையாளம் காண வேண்டும். உதாரணமாக, பொய் கூறுபவர்களின் பட்டியல் ஒன்றை கிராமத்தில் காட்சிப்படுத்த வேண்டும். பொதுமக்களை ஏமாற்றும் குழுக்களையும், பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் குழுக்களையும் பொதுமக்கள் அடையாளம் காண வேண்டும்.

இந்த முறை மீண்டும் ஒரு தவறை செய்தால், அந்தத் தவறை மீண்டும் மாற்ற முடியாத கடுமையான தவறாகிவிடும். எனவே, நாம் இப்போது மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். அவ்வாறென்றால், நாட்டிற்கு ஆட்சியாளர்களை நியமிக்கும் போது இலங்கை மக்கள் சிந்திக்க வேண்டிய ஒரு விடயம் உள்ளது. அடுத்த ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு யாராவது இருந்தால், அவர் எந்த வகையில் பொருத்தமானவர் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். எனவே, இந்நேரத்தில் பொதுமக்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டியுள்ளது.

தற்போது சில தரப்பினர் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். தேர்தலில் வெற்றி பெற முடியாததால், அவர்களின் தனிப்பட்ட வெற்றிக்காக நாட்டை சீர்குலைக்க தயாராகி வருகின்றனர்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் கோரும் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டுமாயின் 18 வீத பெறுமதி சேர் வரி 21 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும் என நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இதனால், உழைக்கும் மக்களின் தேநீர் கோப்பையினதும், அரிசி பொட்டலத்தினதும் விலைகள் அதிகரிக்கும். அவ்வாறு நடந்தால், வங்குரோத்தான நாடு மீண்டும் அதனை விட ஆபத்தான நிலைக்குச் செல்வதைத் தடுக்க முடியாது. இலங்கை மக்கள் அனைவரும் இதற்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என்றும் நம்புகிறோம்." – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.07.2024




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்காண பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் திடமாகவும் ஸ்திரமாகவும் இருக்கும்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மன நிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதற்றம் காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதிநிலையை மேம்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது. நிதி வளங்கள் வற்றிக் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.07.2024




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.

இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம்.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.



Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park